<u>**வாக்குமூலம்**</u>

<u>**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**</u>

<u>**வழக்கு எண் : CC.No. 432 /2018**</u>

<u>**வழக்கு சாட்சி PW-5**</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முகமது காலிப் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | காஜா முகைதீன் | தொழில் | : | டிரைவர் |
| கிராமம் | : | கடையநல்லூர் | வயது | : | 35 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Monday of 11.05.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

<u>**முதல் விசாரணை :**</u>

நான் கடையநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். 2016 ம் ஆண்டு கடையநல்லூர் மாடர்ன் ஸ்கூல் தெருவில் இறந்து போன இப்ராஹீமும், நானும் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது காலை 09.00 மணியிருக்கும். அப்போது 4, 5 பேர்கள் அங்கு வந்து அங்கிருந்த அபுபக்கருக்கு சொந்தமான இடத்தை இடித்து கொண்டிருந்தார்கள். பின்னர் அக்கம் பக்கத்தில் இருந்த நபர்கள் அபுபக்கருக்கு தகவல் சொன்னார்கள். அதற்காக விசாரிக்க வந்த போலீசார் அந்த இடத்தில் படம் வரைந்தார்கள். நான் கையெழுத்து போட்டு கொடுத்தேன். என்னுடன் இறந்து போன இப்ராஹிமும் கையெழுத்து போட்டு கொடுத்தார். பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

நான் காலை 10.30 மணியளவில் கையெழுத்து போட்டு கொடுத்தேன். நான் சம்பவயிடத்திற்கு எதற்கு சென்றேன் என்றால் சம்பவயிடத்தின் அருகே தான் எனது வீடு உள்ளது. அந்த இடத்திற்கு அருகில் தெசிமா வீடு உள்ளது. கிழக்கே லைன் வீடுகள் உள்ளது. மேற்கே வாடகைக்கு குடியிருந்து வருகிறார்கள். அவர்கள் பெயர் எனக்கு தெரியாது. தெற்கே யாருடைய வீடு உள்ளது என்று எனக்கு தெரியாது.

எனக்கு அவ்வளவாக படிக்க தெரியாது. நான் சொல்லியுள்ள சாட்சியத்திற்கும், பார்வை மகஜரில் குறிப்பிட்டுள்ளவைகளுக்கும் தொடர்பில்லை என்றாலும், நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. சம்பவயிடம் சம்பவ காலக்கட்டத்தில் வயற்காடும், வீடுமாக இருந்தது. நான் சம்பவத்தை பார்க்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.05.19 13:10:32 +0530